**முதன்மை சார்பு நீதிமன்றம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம்**

**அசல் வழக்கு எண்.275/2023**

2026–ம் ஆண்டு **மார்ச் மாதம் 18–ம் தேதி** வாதி தரப்பு சாட்சி **வா.சா.1–ன்** வாக்குமூலம் 1989ம் ஆண்டு 19வது விதி ஏற்பாட்டின்படி திரு.எம்.ராமச்சந்திரன், பி.காம்.,பி.எல்., என்பவரால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | விஜயகுமார் | வா.சா. | 1 |
| த/க/பெயர் | பெருமாள் | தொழில் | பணி ஓய்வு |
| கிராமம் | மல்லசமுத்திரம் | வட்டம் | திருச்செங்கோடு |
| வயது | 73 | நாள் | 18.03.2026 |

**முதல் விசாரணை:–**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். நான் இந்த வழக்கில் என்னுடைய நிரூபண பிரமாண வாக்குமூலத்தை தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விபரங்கள் தெரியும், அதிலுள்ள கையெழுத்து என்னுடையதாகும். எனது நிரூபண வாக்குமூலத்தை முதல் விசாரணையாக ஏற்று, அதில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை முறையே கீழ்கண்டவாறு குறியீடு செய்து, வழக்குரையில் கோரியுள்ளவாறு பரிகாரம் வழங்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1) 15.07.2020 தேதியிட்ட வாதிக்கு பிரதிவாதி எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டு அசல் **வா.த.சா.ஆ.1 ஆகவும்,**

2) 22.04.2023 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய அறிவிப்பு நகல் **வா.த.சா.ஆ. 2 ஆகவும்,**

3) 25.04.2023 தேதியிட்ட வாதி அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.3 ஆகவும்,**

4) 11.05.2023 தேதியிட்ட வாதி பிரதிவாதிக்கு அனுப்பிய இரண்டாவது அறிவிப்பு நகல் **வா.த.சா.ஆ.4 ஆகவும்,**

5) 12.05.2023 தேதியிட்ட வாதி இரண்டாவதாக அனுப்பிய அறிவிப்பை பிரதிவாதி பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.5 ஆகவும்,**

6) 31.05.2023 தேதியிட்ட முதலாவதாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.6 ஆகவும்,**

7) 01.06.2023 தேதியிட்ட பிரதிவாதி வாதி வழக்கறிஞர் மூலமாக முதலாவாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை**வா.த.சா.ஆ.7 ஆகவும்,**

8) 20.06.2026 தேதியிட்ட வாதி இரண்டாவதாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.த.சா.ஆ.8 ஆகவும்,**

9) 22.06.2023 தேதியிட்ட பிரதிவாதி வாதி வழக்கறிஞர் மூலமாக இரண்டாவதாக அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஒப்புகை அட்டை **வா.த.சா.ஆ.9 ஆகவும்,** ஆகியவற்றை குறியீடு செய்து கொண்டு தாவாப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**பிரதிவாதியின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.**

Sd/-M.Ramachandran

| |
|---|
| Taken down before / by me in the open court and read over / interpreted to the witness and<br>acknolwedged by him / her to be correct. |
| Sd/.M.Ramachandran,<br>Principal Subordinate Judge, Tiruchengode. |